அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்.

அன்பிற்க்குரிய இயக்க வழி சொந்தங்களே அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்) வளமார் மாதமாம் ரமலான் நம்மை அடைய சில தினங்களே இருக்கின்றன இந்த மாதம் நம்முடைய ஆன்மிக மேம்பாட்டுக்கும் இறையுவப்பை பெறுவதற்கும் அற்புதமான வாய்ப்பாகும்.

ரமலான் மாதம் உளத் தூய்மைக்கான மாதமாகும் நம்மைத் தூய்மைப்படுத்தி சுயமுன்னேற்ற பாதையில் நம்மயும் இந்த சமூகத்தையும் எந்த நேற்மறையான மாற்றத்தை நோக்கி நகர்த்த வேண்டும் என்று விரும்புகின்றோமோ அதற்கான மாதமாகும்.

வெறும் விருப்பம் மட்டும் போதாது அதனை அடைய இறைப்பாதையில் கடுமையாக போராட வேண்டும். அதற்கு முறையாக திட்டமிட வேண்டும் சரியாக இலக்கை நிர்ணயிக்க வேண்டும் மேலும் இந்த பாதையில் ஏற்படும் எல்லா தடைகளையும் தகர்த்தெரிந்து இலக்கை நோக்கி பயணிக்கவும் வெற்றி பெறவும் நம்முடைய கடுமையான முயற்சி தேவைப்படுகிறது.

தனிப்பட்ட ரீதியில் நம்முடைய உள்ளத் தூய்மைக்கும் இறைவனை நெருங்குவதற்கும் கவனம் செலுத்தும் அதே வேளையில் இஸ்லாமிய இயக்கத்தின் ஊழியராக நாம் நம்முடைய இலக்கை அடையவும் இறைவனுடன் நாம் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றவும் இந்த வளமார் மாதம் நமக்கெல்லாம் ஒரு உந்து சக்தியாக இருக்கும் இன்ஷா அல்லாஹ்.

ரமலான் மாதம் எண்ணிலடங்காத நன்மைகளை அறுவடை செய்யக்கூடிய மாதமாகும் எனவே இந்த மாதத்தை பரி பூரணமாக இயக்க ஊழியர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தனிநபர்/வட்டம்/ஹல்கா அளவில் ரமலான் மாத திட்டமிடல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அல்லாஹ் இந்த வளமார் மாதத்தில் முறையாக திட்டமிடவும் கடுமையாக உழைக்கவும் வலிமையையும் வழிகாட்டுதலையும் கொடுப்பானாக மேலும் நம் வாழ்நாளில் பல ரமலான்களை அடையும் பாக்கியத்தை கொடுப்பானாக ஆமீன்..

இறையன்புடன் உங்கள்

சாஜிதா அஹ்மத்

நாஜிம் ஹல்கா

IFC QATAR.

தலைப்பு : وَجَاهِدُوْا فِى اللهِ حَقَّ جِهَادِهٖ மேலும், அல்லாஹ்வின் பாதையில் நீங்கள் எவ்வாறு ஜிஹாத் செய்ய வேண்டுமோ அவ்வாறு ஜிஹாத் செய்யுங்கள். **22:78.**

தனிநபர் திட்டமிடல்:

ஒவ்வொரு இயக்க ஊழியரும்

1. ஒரு மாதத்திற்கான (ரமலான் மாத உள்ளத் தூய்மைக்கான) திட்டமிடலை உங்கள் தள அமீரிடம் (UI) சமர்ப்பிக்க வேண்டும்.
2. திருக்குர்ஆனின் சில பகுதிகளை மொழிபெயர்ப்புடன் மற்றும் தஃப்சீருடன் தினமும் வாசிக்க வேண்டும்.
3. அல்குர்ஆனின் சில பகுதிகள் மற்றும் துஆக்களை மனனம் செய்ய திட்டமிட வேண்டும்.
4. அல்குர்ஆன் & குடும்பம்: கீழே கொடுக்கப்பட்டுள்ள அத்தியாயங்களை குடும்பத்துடன் அமர்ந்து சுவாசிக்க வேண்டும்.
    - ஸூரா முஹம்மத்
    - ஸூரா ஃபத்ஹ்
    - ஸூரா காஃப்
    - ஸூரா தாரியாத்
    - ஸூரா ஃபஜ்ர்
    - ஸூரா ஷம்ஸ்
    - ஸூரா அலக்
    - ஸூரா கத்ர்
5. எல்லா இயக்க ஊழியர்களும் தங்களுடைய ஜகாத்தை அதற்குறிய ஒழுங்கில் ஒப்படைக்க வேண்டும்.

ஹல்கா/தள/டிவிஷன் அளவில் நடைப்பெற வேண்டிய நிகழ்வுகள்.

1. மர்கஸ் அளவில் ரமலானே வருக நிகழ்ச்சி நடத்தப்படும்.
2. இஃப்தார் நிகழ்ச்சி : தள அளவில் ஒன்று , டிவிஷன் அளவில் ஒரு கேம்பில் , ஒரு முஸ்லிம் அல்லாத சகோதரர்களுக்காக (ரமலான் இரண்டாவது வாரத்தில்) நடத்த வேண்டும்.
3. ஷப் பேதாரி (இரவு விழித்திருத்தல்) நிகழ்ச்சி ஆண்கள்/ பெண்கள் தனித்தனியாக நடைப்பெறவேண்டும். (Zone Wise)
4. வாராந்திர திருக்குர் ஆன் தஃப்ஸீர் நிகழ்ச்சி நேரலையில் நடத்த வேண்டும்.
    - கன்னடா ஹல்கா
    - உருது ஹல்கா
    - தமிழ் ஹல்கா

6. ஈத் மிலன் நிகழ்ச்சி நோன்பு முப்பெரும் நாளில் இருந்து மூன்றாவது நாள் நடத்தப்பட வேண்டும்.

வழிக்காட்டல் :

1. எல்லா ஊழியர்களும் இஃப்தார் கிட் நிகழ்வில் பங்கு பெற முயற்சிக்க வேண்டும்.

2. ரமலான் மாதத்தில் ஒரு முறை முழுவதுமாக திருக்குர்ஆனை வாசித்து முடிக்க வேண்டும்.

3. எல்லா ஊழியர்களும் ஃபித்ரா பணத்தை 27 ரமலான் பிறைக்கு முன்பாக மர்கஸில் சேர்க்க வேண்டும்.

4. ஷாபான் மாதத்தின் இறுதி வாரத்தில் வாராந்திரக் கூட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் நடத்த வேண்டும். இறைவழியில் செலவழித்தல், மக்கள் பணி, ஜகாத், ரமலான் மற்றும் குர்ஆன், ரமலானும் தக்வாவும்.